[10th March 1965

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்த எலும்பு உரம் மிகச் சிறந்தது என்று சொல்லுகிறீர்கள். 1961-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி கால்நடைகளின் எண்ணிக்கை 2,39,000 என்று சொல்லப்படுகிறது. கால் நடைகள் ஏராளமாக இருந்தாலும், அவைகள் இறந்த பின் அந்த எலும்புகளைச் சரிவர சேகரிப்பதில்லை. ஆகவே மக்களுக்கு ஜனன மரணக் கணக்கு இருப்பது போல், கால்நடைகளுக்கும் அந்தக் கணக்கை எடுக்க ஏற்பாடு செய்து இறந்த கால்நடைகளின் எலும்புகளைச் சேகரித்து உர உற்பத்தி செய்ய பெரிய தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உரம் எலும்புத் தூள் கலந்து செய்வது என்ற விவரம் எல்லோருக்கும் தெரியும். தனியார் துறையிலே ஐந்து உரத் தொழிற்சாலைகள் வேலை செய்துகொண்டிருக்கின்றன. தனியார் துறையிலே யாரும் ஊக்கம் அளிக்காவிட்டால் அப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். ஏற்கெனவே ஐந்து தொழிற்சாலைகள் லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட மூலதனம் போடப்பட்டு நடந்துவருகின்றன. ஏராளமான சிறு சிறு தொழிற்சாலைகள் 10 ஆயிரம் ரூபாய் மூலதனத்தில் நடக்கக்கூடியதாக இருக்கின்ற காரணத்தினால் சர்க்கார் நடத்த வேண்டும் என்ற உத்தேசம் இல்லை.

திரு ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, சிறு சிறு தொழிற்சாலைகளில் அதாவது காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸில் உரம் விற்பனையாகாமல் அதிகமாகத் தேங்கிக் கிடப்பதால் அதற்கு சப்சிடி ஸ்கீம் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது என்னுடைய சக அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி.

திரு. து. ப. அழகமுத்து : நமது மாநிலத்தில் எலும்புகள் சேகரிக்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Radio photo equipment factory

* 197 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to instal a radio photo equipment factory in the city; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இல்லாவிட்டாலும் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் சர்க்கார் கொள்கையை அடிக்கடி விளக்கிச் சொல்லியிருக்கிறேன். எந்த ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலமாக பல தொழில்கள் தனியார் செய்ய முன் வரக்கூடுமோ, அதை சர்க்கார் ஆரம்பிக்க முன் வரும். பொதுவாக மற்ற தொழில்களைத் தனியாருக்கு விட்டுவிடுவதுதான் சர்க்காரின் கொள்கை. இந்த ரேடியோ போட்டோ சாதன தொழிற்சாலை தனியார் செய்யக்கூடிய ஒன்று. அதற்கு யாராவது முன்வந்தால் வேண்டிய உதவி அளிக்கப்படும்.

10th March 1965]

திரு. வை. சங்கரன் : இது வரையில் யாராவது முன் வந்து விண்ணப்பம் கொடுத்து இருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : உதகையில் இருக்கும் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் பாக்டரியில் இந்த கதிர் ஒளி சாதனங்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது வேறு. ஹிந்துஸ்தான் போட்டோ கம்பெனியில் தயாரிக்கும் பண்டங்கள் வேறு.

Pay of constables

* 198 Q.—SRI K. CHEEMAICHAMY, PULAVAR K. GOVINDAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal under consideration of the Government for increasing the pay of the constables on the recommendation of the Committee on Estimates?

THE HON. SRI P. KAKKAN : The Government have carefully considered the recommendation of the Committee on Estimates for revising the scale of pay of Police Constables. They are, however, unable to accept this recommendation, as any revision of the pay scale of Police force could take place only as part of a general revision of the pay structure of the State Government employees.

போலீஸ் கான்ஸ்டபிள்களின் சம்பள விகிதங்களை மாற்றியமைக்கும்படி மதிப்பீட்டுக் குழு செய்த பரிவுரையை அரசாங்கம் கவனமாகப் பரிசீலித்தது. எனினும், மாநில அரசாங்க ஊழியர்களின் சம்பள வீதங்களைப் பொதுவாக மாற்றியமைக்கும்போதுதான் போலீஸ் படையினரின் சம்பள வீதங்களையும் மாற்றியமைக்க முடியுமாதலால், இந்தப் பரிவுரையை அரசாங்கம் ஏற்க இயலவில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களின் சம்பளங்கள் மற்ற ஊழியர்கள் சம்பளங்கள் உயர்த்தப்படும்போது உயர்த்த படும் என்ற கருத்தை அமைச்சர் தெரிவித்தார்கள். அண்மையில் மாநில போலீஸாரின் சம்பளத்தை உயர்த்தி சலுகை காட்டப்பட்டிருக்கிறது. அது எந்தக் கொள்கையின் அடிப்படையில் ?

கனம் திரு. பூ. கக்கன் : சம்பள விகிதத்தை உயர்த்துவதற்கும், இன்கிரிமெண்ட் கொடுப்பதற்கும் உள்ள தாரதம்மியத்தை கனம் அங்கத்தினர் அறிவார் என்று நினைக்கிறேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மற்ற மாநில ஊழியர்களைவிட போலீஸ் போர்ஸில் உள்ளவர்கள் சம்பளம் சம்பந்தப்பட்ட மட்டில், தனி போலீஸ் கமிஷன் ஏற்படுத்தி, அந்தக் கமிஷன் மூலமாக அவர்களின் "பே ஸ்கேல்களை" "ரிவைஸ்" பண்ண அரசாங்கத்திற்கு திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : போலீசார் சம்பள விகிதங்களைப் பொறுத்த வரை எவ்வளவு தூரம் சலுகை காட்டமுடியுமோ அவ்வளவு தூரம் அரசாங்கம் காட்டிக்கொண்டுதான் வருகிறது. அரசாங்கம் போலீசாரின் சேவையை நன்கு தெரிந்து இருக்கிறது. நிதி நிலைமைக்குத் தக்கபடி, எவ்வளவு தூரம் இதர ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்படுகிறதோ, அப்போது அவ்வளவு தூரம் இவர்களின் சம்பளமும் உயர்த்த அரசாங்கம் முன் வரும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.